

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், ஆளூர் முதல்நிலை பேரூராட்சியில் இன்று (08.09.2016) நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு நிலவேம்பு குடிநீரினை வழங்கினார். உதவி இயக்குநர் (பொ) (பேரூராட்சிகள்) திரு. மாஹீன் அபுபக்கர் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 608/2016 நாள்: 08.09.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், ஆளூர் முதல்நிலை பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் சுத்தப்படுத்தும் பணிகளை இன்று (08.09.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், ஆளூர் முதல்நிலை பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் சுத்தப்படுத்தும் பணிகளை இன்று (08.09.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நமது மாவட்டத்தில் உள்ள 55 பேரூராட்சிகளிலும் கடந்த ஒரு வாரமாக டெங்கு கொசு ஒழிப்பு பணி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் குப்பை அள்ளும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, டெங்கு கொசு குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், அவர்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கி, தமிழக அரசு வழங்கியுள்ள அறிவுரைகளை பின்பற்ற கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் நிலவேம்பு குடிநீர் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கபட்டு வருகிறது என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் (பொ) (பேரூராட்சிகள்) திரு. மாஹீன் அபுபக்கர், உதவி செயற் பொறியாளர் திரு. மாடசாமி சுந்தர்ராஜ், செயல் அலுவலர் திரு. பிராங்கிளின் நவகுமார், ஆளூர் பேரூராட்சித்தலைவர் திருமதி. ஐ. ரோஸ்லீன் பிரேமலதா, துணைத்தலைவர் திரு. எம். சையத் மசூது, வார்டு உறுப்பினர் திருமதி. மாலா உள்ளிட்ட பேரூராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.